திரு. தே. கேசவலு : ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ருல் என்ன என்ன தகுதிகள் இருக்கவேண்டும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு வட்டத்தை இரண்டாகப் பிரிக்க இவை தான் தகுதிகள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. மாவட்ட நிர்வாகத்தை நல்லமுறையில் அமைக்க புதிய மாவட்டங்களை ஏற்படுத்தலாமா என்பது பற்றி எல்லாம் பரிசிலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அது சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதில் பல நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிர்வாகம் செம்மையான முறையில் அமைய ஒரு மாவட்டம் 20 லட்சம் ஜனத்தொகைக்கு மேற்படக் கூடாது, 20 ப்ளாக்குகள்தான் இருக்கவேண்டும். சிறிய ஜில்லாக்களாக இருந்தால் கலெக்டர் நல்ல முறையில் நிர்வகிக்க முடியும். புதிய மாவட்டங்கள் என்று அமைக்கிறபோது சரித்திர பூர்வமாக, பூகோள்பூர்வமாக, அந்த அந்த பகுதியில் பிற்போக்கு நிலைமைக்கும் ஏற்றவகையில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற முறை யில் எப்படி எப்படி அமைக்கப்படலாம் என்பதுபற்றி பரிந்துரை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் தான் நட வடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

சென்னை கலெக்டர் அலுவலகக் கட்டடம்

* 96 வினு.—திரு. [redacted] எஸ். [redacted] இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) சென்னை கலெக்டர் அலுவலகம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையிலிருப்பதால் அதனை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா ?

(இ) இல்லையானுல் அரசு எடுக்கப்போகும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடம் அதைப் பயன் படுத்திக் கொள்வதற்குத் தகுதியற்ற நிலையிலோ அல்லது அபாய மான நிலையிலோ இல்லை. ஆனுல், தற்போதுள்ள சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள பழைய உயர்நீதி மன்றக் கட்டடம் உள்ள இடத்தில் அதற்குப் பதிலாகப் பல அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கான செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள அந்தக் கட்டடத்தைக் கட்டடப் பொறியியல் வல்லுநர் சோதனையிட்டுப் பார்த்தார்களா ? அப்படியானுல் அந்தக் கட்டடம் எவ்வளவு காலம், எத்தனை ஆண்டுகளுக்குத் தாங்கும் என்று அறிக்கை கொடுத்திருக்கிருர்கள் ? பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப் போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கள். அது எப்பொழுது கட்ட ஆரம்பிக்கப்படும், அதுபற்றி என்ன நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தக் கட்டடம் மிகப் பழைய கட்டடமதான். கட்டடப் பொறியியல் வல்லுநர் அதைப் பார்த்து சரியான கட்டடம்தான் என்று சொன்னார்கள். இருந் தாலும் அது ராபர்ட் கிளைவ் காலத்திலே கட்டப்பட்ட கட்டடம், ராபர்ட் கிளைவ்வுடைய அலுவலகங்கள் எல்லாம் நடத்தப்பட்டிருக் கின்றன; சரியாகத்தான் இருக்கிறது என்று அவர்கள் சொன் னாலும், புதிதாக ஒரு பெரிய எழில் மாடம் கட்டுவதற்குப் பரிசீலனை செய்யக்கூடிய செயற்குறிப்பு இருக்கிறது. இதற்காக மூன்று திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடியே எழுபத்தி இரண்டு லட்ச ரூபாய் அளவில் ஒரு வகையான திட்டத் தையும், ஒரு கோடியே நாற்பத்தி ஏழு லட்ச ரூபாய் அளவில் ஒரு வகையான திட்டத்தையும், ஒரு கோடியே எழுபத்தி இரண்டு லட்சத்தில் இன்னொரு வகையான திட்டத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். இதிலே ஒருகோடியே நாற்பத்தி ஏழு லட்ச ரூபாய் அளவில் உள்ள திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதனபடி முதல் கட்டமாக நான்கு ஏழடுக்கு மாடிக கட்டடங்கள் கட்டு வதற்கு ஆன செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது; 1969-70-இல எடுத்துக்கொளளப்படுவதற்கு ஆலோசனை செய்யப்படு கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகம் கார்ப்பரேஷ னுக்கும், கலெக்டர் ஆபீஸுக்கும் பாதிப் பாதியாகப் பிரிந்து இருக்கிறது. இதை வைத்துப் பார்க்கிற நேரத்திலே அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவுசெய்து இப்பொழுது இருக்கிற அந்தக் கட்டடத்தைப் புனராலோசனை செய்வதற்குப் பதிலாக கார்ப்பரேஷனுக்குப் பக்கத்திலே சில லட்ச ரூபாய் செலவிலே ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசாங் கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த அடிப்படையிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. இப்பொழுது அந்தக் கட்டடம் நல்ல நிலையில் இருந்தாலும் சில காலத்திற்குள் அது உடைந்துவிடலாம் என்பதையொட்டியும், துறைமுகத்திற்குச் சமீபமான இடமாக அது இருப்பதாலே, மிகவும் முக்கியமான கேந்திரமாக அது இருப்பதாலே அங்கே அப்படிப்பட்ட ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டினால் கலெக்டர் ஆபீஸ் அல்லது வேறு பல அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலகங்களை—வணிகவரித் துறை அலுவலகங்கள் போன்றவை இப்பொழுது வாடகைக் கட்டடங்களிலே வட சென்னையிலே இருந்துகொண்டிருக்கின்றன —அங்கே வைத்து, மேலும் அவற்றை வர்த்தக நிறுவனங்களுக்கும்

1969 பிப்ரவரி 28]

வாடகைக்கு விட்டு இந்த 1½ கோடி ரூபாயைச் சரிசெய்துவிட முடியும். எனவே, அது விரயம் அல்ல. துறைமுகப் பகுதியிலே இந்தக் கட்டடம் அமைந்தால் வேறு பல நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்தலாம் என்ற அடிப்படையிலே தான் இது கட்டப்படுகிறது.

திரு. இராம அரங்கண்ணல் : இந்த 1½ கோடி ரூபாய் செலவில் கட்டப்போவதாகச் சொல்லப்படுகிற கட்டடத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது முடிவு எடுக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆலோசனைக்கும், முடிவுக்கும் நமது உறுப்பினர் அவர்களுக்கு வித்தியாசம் தெரியும். முடிவு எடுக்கப்பட்டது என்றால் முடிவு செய்யப்பட்டு விட்டது என்று பொருள். ஆலோசனையில் இருக்கிறது என்றால் அது இந்த வருடம் வரலாம், வராமல் போகலாம், அல்லது அடுத்த வருடம் வரலாம், வராமல் போகலாம் என்றெல்லாம் குறிக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : இப்பொழுது கட்டப்பட இருக்கிற கட்டடத்தை நகரத்தின் வேறு இடத்திலே கட்ட அரசாங்கம் உத்தேசிக்குமா ? இப்பொழுது இருக்கிற இடத்திலே கட்டினால் அது ஓரமான இடத்திலேயும் நெருக்கடியான இடத்திலேயும் இருக்கிறது. எனவே அந்தப் புதிய கட்டடத்தை வேறு நல்ல பகுதியிலே கட்ட அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த இடம் நகரத்திலே ஒரு கேந்திரமான இடம். இப்பொழுது இருக்கிற கட்டடம் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாலு வருஷம் கழித்து மீண்டும் கட்டப்பட வேண்டும். மணிநகரப் பள்ளியிலே ஏற்பட்ட நிகழ்ச்சி மாதிரி உடைந்து விழுந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. கலெக்டர் ஆபீஸுக்காக மட்டும் நாம் இதைக் கட்ட உத்தேசிக்கவில்லை. போர்டு ஆப் ரெவின்யூவைப்போல் பல வணிக வரி அலுவலகங்கள் இங்கே கொண்டுவரப்படலாம். இதனால் நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. மற்ற நிறுவனங்களுக்கும் வாடகைக்கு விடுவதின் மூலம் 10 வருஷங்களுக்குள்ளே அதற்காகச் செலவு செய்யப்படும் பணத்தை சம்பாதித்துவிடலாம் என்ற அடிப்படையிலேதான் இதுபற்றி ஆலோசனை செய்யப் பட்டு வருகிறது.

விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி

* 97 வினு.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உணவு-வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விதைப் பண்ணைக்கு உருளைக்கிழங்கு விதைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நாட்டிலிருந்து ?